2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) கடலூர் சிப்காட் பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் மர்ம நோய்

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Nothing. உட்காருங்கள். கடலூர் சிப்காட் பகுதியில் உள்ள [illegible] நிறுவனம் விஷக் கழிவு நீரை வெளியிடுவதால் அது குடிநீரில் கலந்து மர்ம நோய் ஏற்பட்டுள்ளதால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் 56-வது விதியின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார். தகவல் கோரல் என்ற முறையிலே அதை எடுத்துக்கொள்கிறேன். அதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

(இ) கடலூர், தனியார் கிறித்தவ பள்ளி மாணவி மரணம்

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இன்று காலை நடந்த ஒரு சம்பவம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அந்தக் கருத்தை நான் வலியுறுத்திய பிறகு இந்தப் பிரச்சினை குறித்து நான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. முதலில் இதுகுறித்துச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: முதலமைச்சர் அவர்களிடத்தில் காலையில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி கொடுத்திருப்பது இதற்குத்தான். இதுகுறித்து பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: Zero hour-ல் இது முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ஒரே வரியில் அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு திரும்ப இந்தப் பிரச்சினைக்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 4-30 மணியளவில் கடலூரில் இருக்கிற மிகப் புகழ் பெற்ற ஒரு தனியார் கிறித்தவ சிறுபான்மை

2007 அக்டோபர் 22] [திரு. தி. வேல்முருகன்]

அமைப்பு நடத்துகின்ற பள்ளி; அங்கு மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் கல்வியை ஊட்டி வருகிறது. அந்த நிறுவனம் மிகப் பெரிய கல்விப் பணியை, அரும் பணியை ஆற்றி வருகிறது. அந்தப் பள்ளியில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த என்னுடைய உறவினர் பெண் ஆனந்தவல்லி, 12 ஆம் வகுப்புப் படித்து வந்தவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கிறார். ஆதலால் அந்தப் பள்ளியைச் சுற்றி அவர்களுடைய உறவினர்களும், என்னுடைய உறவினர்களும், எப்படி அந்தக் கொலை நடந்தது என்கிற நிலையில் அங்கு மிகப் பெரிய ஒரு பதட்டமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு உடனே புறப்பட்டு வாருங்கள் என்று சொன்னபோது, நான் வெளியே வந்தவுடனே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நம்முடைய அவைக்கு வந்தார். நான் நேரடியாக அவரிடத்தில் சென்று இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது, தாங்கள் விசாரணைக்கு உத்தரவிட்டு நியாயம் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தேன். உண்மையிலேயே அந்தப் பள்ளி மிகப் பழமைவாய்ந்த பள்ளி. சிறப்பான கல்விப் பணி ஆற்றி வருகிற பள்ளி. அந்தப் பள்ளியினுடைய பெயருக்கும், புகழுக்கும் எந்தவித களங்கமும் ஏற்படக்கூடாது என்பது என்னுடைய ஆசை. அதேவேளையிலே அங்கு ஒரு பெண் மர்மமான முறையில் வேறு இரண்டு துப்பட்டாக்களோடும், வாயில் துணி வைக்கப்பட்டும் இறந்து கிடக்கிறார் என்ற ஒரு செய்தி வருகிறது. இதில் அங்கு என்ன நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டு, அந்த உண்மையை இந்த நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, உயிரிழந்த அந்த மாணவியினுடைய குடும்பத்தாருக்கு—கருணை உள்ளத்தோடு இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அது கொலையா, தற்கொலையா என்பது தங்கள் உத்தரவிற்குப் பிறகு நாட்டு மக்களுக்குத் தெரிய வரும். ஆனால், தவித்துக் கொண்டிருக்கிற அந்த ஏழை குடும்பத்திற்கு—ஏதாவது ஒரு தொகையை நீங்கள் முன்வந்து அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள பிரச்சினை உருக்கமானது. அதேநேரத்தில் விசாரித்து, உண்மை என்ன என்று தெரிந்துகொள்ளப்பட வேண்டியது. இந்தச் சூழ்நிலையில் அந்தக்

குடும்பத்தாருக்கு உதவித் தொகை கொடுங்கள் என்று சொல்வதும், உடனடியாக உண்மையைக் கண்டறிந்துச் சொல்லுங்கள் என்று கூறுவதும் அவ்வளவு பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்த வேண்டுகோளில் சாரம் இருப்பதை நான் உணர்கிறேன். உணருகிற காரணத்தால், ஏற்ற வகையில் விசாரணை நடத்தி என்ன குற்றம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உறுப்பினர்கள் அவர்கள் அந்தக் குடும்பத்தைப் பற்றிச் சொல்லி, உடனடியாக இப்போதே ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உதவி செய்வது என்பது எப்போதும் செய்யலாம், அமைச்சர்களும் செய்யலாம், அந்தத் தொகுதியினுடைய உறுப்பினரும் செய்யலாம். எனவே, அவசர உதவியை, தம்பி வேல்முருகன் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு, பிறகு அரசிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முதலில் அந்த உதவியை அவர் செய்து, அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

(ஆ) கடலூர் சிப்காட் பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் மர்ம நோய்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் வளாகத்தில் ஏராளமான கெமிக்கல் நிறுவனங்கள் உருவாகியுள்ளன. இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தொடரில் நான் கடந்த ஏழு ஆண்டு காலமாக பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், சிறப்புக் கவன ஈர்ப்புகளையும் கொண்டு வந்து, ஏற்கெனவே நமது முதலமைச்சரிடத்திலேயும் கோரிக்கை வைத்துப் பேசியிருக்கின்றேன். நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, இந்தப் பிரச்சினையை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவையிலேயும் நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து, என்னுடைய தலைமையில், சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து, அங்கு ஓர் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, நிச்சயம் இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்கள்.